முதன்மை சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்.

2025 ம் ஆண்டு **நவம்பர்** மாதம் 24–ம் தேதி வாதி தரப்பு சாட்சி **வா.சா.1–**ன் வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன்,பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**அ.வ.எண்.275/2024**

**வா.சா:–1 ( சத்யாபிரியா)**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி (பிரதிவாதி தரப்பில்):–**

தாவா சொத்தை எவ்வளவு தொகைக்கு கிரயம் பெறப்பட்டது என்றால் ரூ.51,500/–க்கு கிரயம் பெறப்பட்டது. நான் பிரதிவாதியிடம் பணிபுரிந்தபோது எனக்கு முதலில் மாத சம்பளம் ரூ.1000/–மும், பின்னிட்டு ரூ.2000/– பெற்றுவந்தேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியிடம் நான் வேலை பார்க்கவில்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் நான் வாங்கும் மாத சம்பளம் ரூ.2000/–த்தில் எனது மாமியாரிடம் ரூ.1000/– கொடுத்துவிடுவதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எவ்வளவு வருடம் மாமியாரிடம் வாங்கிய சம்பளத்தில் வாங்கிய சம்பளத்திலிருந்து தொகை கொடுத்துவந்தேன் என்றால் ரூ.2000/– சம்பளம் வாங்கியபோது ரூ.1000/– கொடுத்துவந்தேன். அதன் பிறகு எனது சம்பளம் உயர்ந்த பிறகு அதற்கு தகுந்தவாறு தொகையை உயர்த்தி 2006 அல்லது 2007–ம் வருடம் வரை கொடுத்துவந்தேன். எனது பெற்றோர்கள் என்ன செய்துவருகிறார்கள் என்றால் தற்போது சும்மா தான் இருந்துவருகிறார்கள். முன்பு எனது அப்பா ஏர்செல் கம்பெனியில் வேலை பார்த்தார். பின்னிட்டு சென்னையில் உள்ள லக்ஷ்மண் சுருதி நிறுவனத்தில் மேலாளராக வேலை பார்த்தார். என் அப்பா வேலை பார்த்த சமயத்தில் அவரது மாத சம்பளம் எவ்வளவு என்றால் தெரியாது. எனது பெற்றோர்கள் எனக்கு சொத்துக்கள் ஏதாவது கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை. திருமணத்தின்போது நகை போட்டுள்ளார்கள். எவ்வளவு பவுன் போட்டார்கள் என்றால் 50 பவுன் போட்டார்கள். என் கணவர் என்ன படித்துள்ளார் என்றால் அவர் டிகிரி முடிக்கவில்லை. கேட்டால் டிகிரி சான்றிதழ் தொலைந்துவிட்டதாக கூறுகிறார். எங்கள் திருமணத்திற்கு முன்பாக எனது கணவர் என்ன தொழில் செய்துவந்தார் என்றால் 4, 5 பேருடன் சேர்ந்து கூட்டாக கம்ப்யூட்டர் சென்டர் நடத்திவந்தார். எனது கணவர் எனது திருமணத்திலிருந்து ஆசிரியராக

பணிபுரிந்துவந்தாரா என்றால் அவர் தொடர்ச்சியாக ஆசிரியராக பணிபுரிந்து வரவில்லை. 1 வருடம் ஆசிரியர் வேலை பார்த்தார். பின்பு தொழில் செய்வதாக போய்விடுவார். இவ்வாறு மாறி மாறி எந்த வேலைக்கும் முறையாக செல்லவில்லை. பிரதிவாதி தற்போது எங்கு பணிபுரிந்துவருகிறார் என்றால் விஜய் விகாஷ் பள்ளியில் பணிபுரிந்துவருகிறார். பிரதிவாதிக்கு எவ்வளவு சம்பளம் என்றால் மாதம் ரூ.25,000/- சம்பளமாகும். பிடித்தம் போக கையில் ரூ.20,000/- வாங்குவார். நான் எந்த வருடம் முதல் வருமான வரி செலுத்திவருகிறேன் என்றால் 2009, 2010 வருடம் முதல் வருமான வரி செலுத்திவருகிறேன். நான் இதுவரை வருமான வரி செலுத்திவந்ததற்கான ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் 4 ஆடிட்டரிடம் மாறி மாறி ஒவ்வொரு வருடமும் கணக்கு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆடிட்டரிடம் கேட்டு ஆவணங்கள் கிடைத்தால் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். தாவா சொத்தை தவிர என் பெயரில் வேறு என்னென்ன சொத்துக்கள் உள்ளது என்றால் ஈரோடு, வில்லரசம்பட்டியில் ஒரு வீடு உள்ளது. அது தவிர விஜய் விகாஷ் பள்ளியில் எனக்கு பங்கு உள்ளது. மேலும் கோபியில் உள்ள எம்ஆர்எஸ் பள்ளியிலும் ஒரு பங்கு உள்ளது. வில்லரசம்பட்டியில் உள்ள வீடானது எந்த வருடம், எவ்வளவு தொகைக்கு வாங்கப்பட்டது என்றால் 2011-ம் வருடம் இடம் மட்டும் ரூ.1,22,600/-க்கு வாங்கினேன். நான் ஈரோடு குடும்ப நல நீதிமன்றத்தில் தாக்கல் செய்த எதிருரை மற்றும் மனு ஆகியவற்றை ஏன் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லையென்றால் வழக்குரையில் மேற்படி விவாகரத்து மனு நிலுவையிலிருக்கும் விவரத்தை குறிப்பிட்டுள்ளேன். ஈரோடு குடும்ப நல நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள விவாகரத்து மனுவில் எதிர்மனுதாரருக்கு 2 முகவரி இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி மனுவில் 2வதாக குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு தான் சம்மன் அனுப்பப்பட்டுள்ளது என்றால் இல்லை. 2 முகவரிக்கும் சம்மன் அனுப்பப்பட்டது. தாவா சொத்தை எப்போது கிரயம் பெற்று வீடு கட்டினேன் என்றால் 2010-ம் வருடம் இடத்தை கிரயம் வாங்கி, 2019ம் வருடம் வீடு கட்ட ஆரம்பித்து அதே வருடம் செப்டம்பர் மாதம் வீடு கட்டி முடிக்கப்பட்டது. மேற்படி வீடு கட்டியதிலிருந்து பிரதிவாதியின் பெற்றோர்கள் தான் குடியிருந்துவருகிறார்கள் என்றால் பிரதிவாதியுடன் நானும் சுமார் 2 மாதம் குடியிருந்துவந்தேன். பிரச்சினை ஏற்பட்டதால் நான் அந்த வீட்டை விட்டு வெளியேறிவிட்டேன். என்னிடம் காட்டப்படும்

ஆதார் கார்டில் உள்ள முகவரி தான் எனது மாமியாரின் முகவரி என்றால் சரிதான். அந்த முகவரி தாவா சொத்திற்குண்டான முகவரி என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆதார் கார்டு நகல் என்னுடைய கணவருடையது என்றால் சரிதான். என் கணவர் ஆதார் கார்டில் கண்டுள்ள முகவரியில் வசித்து வருகிறார் என்றால் சரியல்ல. திருச்செங்கோட்டில் வசித்துவருகிறார். என் கணவர் தாவா சொத்தில் குடியிருந்து வந்ததற்கான ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்தில் நிரந்தரமாக வசித்துவரும் பிரதிவாதி பெற்றோர்களை ஏன் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லையென்றால் எனது கணவருக்கு பெற்றோர்கள் என்ற முறையில் அவர்கள் தாவா சொத்து வீட்டில் இருந்ததால் அவர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக என் மாமியார் என் மீது புகார் கொடுத்தார் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் விசாரணை செய்து என் பெயரில் ஆவணங்கள் சரியாக இருப்பதாக கூறி சிவில் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுங்கள் என்று அனுப்பிவிட்டார்கள். காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் பேரில் நடைபெற்ற விசாரணை சம்மந்தப்பட்ட ஆவணங்கள் ஏன் தாக்கல் செய்யவில்லையென்றால் பிரதிவாதியின் தாயார் கொடுத்த புகாரின் பேரில் சிஎஸ்ஆர் எதுவும் பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளவில்லை. இருவரையும் அழைத்து வாய்மொழியாக விசாரணை செய்து நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளுங்கள் என்று எழுதி அனுப்பிவிட்டார்கள். அதனால் விசாரணை நடைபெற்றது சம்மந்தமாக ஆவணங்கள் எதுவும் இல்லை. தாவா சொத்தில் உள்ள வீட்டில் கேஸ் இணைப்பு யார் பெயரில் உள்ளது என்றால் தெரியாது. வழக்குரை பத்தி 4–ல் பலமுறை பிரதிவாதியிடம் தாவா சொத்தின் சுவாதீனம் ஒப்படைக்க கோரி கேட்டதாகவும், அதை மறுத்ததால் தான் ஈரோடு குடும்ப நல நீதிமன்றத்தில் எப்சிஓபி.எண்.342/2024 தாக்கல் செய்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கும், பிரதிவாதிக்கும் பிரச்சினை ஏற்பட்டு பிரதிவாதி என்னிடம் வீட்டை எழுதிக்கொடுக்கவேண்டுமென்று பிரச்சினை செய்ததால் தான் சேர்த்துள்ளேன். மேலும் பிரதிவாதி என்னிடம் ஒரு வர்த்தமான உடன்படிக்கை ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார். அதை தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கின் வழக்குரையானது என்னால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். தற்போது தாவா சொத்தில் யார் குடியிருந்துவருகிறார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் பிரதிவாதியும், அவரது உறவினர்களும் இருந்துவருகிறார்கள். என் கணவர்

பெயரில் வேறு என்ன சொத்துக்கள் உள்ளது என்றால் எனக்கு தெரிந்து அவருக்கு சொத்துக்கள் எதுவும் இல்லை. பிரதிவாதியின் அம்மா, அப்பா பெயரில் சொத்துக்கள் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/-M.Ramachandran

Taken down before / by me in the open court and read over / interpreted to the witness and acknolwedged by him / her to be correct.

Sd/.M.Ramachandran, Principal Subordinate Judge, Tiruchengode.